'□□□□□□□□' □□□□ □□□□□□□ □□□□□□□□□□ □□□□□□□□ □□□□□□□□□□!

Written by - தகவல்: டாக்டர் போல் ஜோசப் -
Sunday, 14 October 2018 07:13 - Last Updated Sunday, 14 October 2018 07:16



டாக்டர் போல் ஜோசப் அவர்களின்

நூல்கள் வெளியீட்டு நிகழ்வு அழைப்பிதழ்

அன்புடையீர்

இந்த அழைப்பிதழ் வாயிலாக தங்களோடு தொடர்பு கொள்வதில் மிக்க மகிழ்ச்சி. கனடாவில் நான் கடந்த சில வருடங்களாக எழுதிவந்த ஆரோக்கியம் தொடர்பான கட்டுரைகளில் சிலவற்றை தொகுத்து **"நலம் நலமறிய ஆவல்"** என்ற நூலாகவும், எனது வசன கவிதைகளைத் தொகுத்து **"அகவிதைகள்"** எனும் நூலாகவும், மருந்துகளின்றி நலமுடன் வாழ்வது தொடர்பாக நான் ஆற்றிவரும் உரைகளின் முதல் தொகுப்பாக **"வருமுன் காப்போம்"** என்ற இறுவட்டும் (CD) தங்களின் பேராதரவோடு வெளியிட ஆவலாயுள்ளேன்.

இந்த நிகழ்வுக்கு தாங்கள் சிறப்பு அழைப்பாளராக வந்து கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும் என்பதே எனது பேராவல் என்பதால் உங்களை அன்புடன் அழைக்கின்றேன்.

நாள்: **14 அக்டோபர் 2018 (ஞாயிற்றுக்கிழமை)**
நேரம்: மாலை 6:00 மணி
இடம்: Sri Sathya Sai Baba Centre of Scarborough
5321 Finch Avenue East, Scarborough, ON. M1S 5W2
(Middlefield Rd. & Finch Ave.)
எனது செல்பேசி இலக்கம்: 416 986 4903

இப்படிக்கு
தங்கள் பாசமுள்ள
டாக்டர் போல் ஜோசப்

குறிப்பு: தயவுசெய்து தங்கள் வருகையினை எனது தொலைபேசியூடாக உறுதி செய்யுமாறு பணிவன்புடன் வேண்டுகிறேன். - நன்றி

"நலம் நலமறிய ஆவல்" (ஆரோக்கிய நூல்)

- இதய நோய்கள் இனி பயம் வேண்டாம்
- முக்கோண மருத்துவம் - இதென்ன புதுசா இருக்கு!
- மனஅழுத்தம் மாற்றிட வழிகள்
- மணவாழ்வில் மனம் மகிழ்ந்திட.....
- முள்ளிவாய்க்கால் சின்றோம்
- பதினோராவது விரல் - (செல்போன்களால் வரும் நோய்கள்)
- மனிதனுக்கு மூன்று இதயங்கள்
- மருந்துகளின்றி வாழ்ந்து பாருங்கள்
- மனவேதியல்
- உடல் உள்ளம் உயிராற்றல் ஒரு புதிய பரிமாணம்
- எப்படி, எப்போது, எதை உண்பது..
- இப்படி இன்னும் பல 86 தலைப்புகளில்...

"அகவிதைகள்" (வசனகவி நூல்)

"நயகரா நதியும் வீழ்ச்சியும்
கனடா நாயகியின் சேலையின்
முப்பத்தாறு மைல் முந்தானைத் தலைப்பு
துச்சாதனன் துகிலுரிந்து கொண்டிருக்கிறான்
திரௌபதியோ நிர்வாணபடவில்லை
அனைவரும் அக்களிப்புடன் பார்க்கும்
அழகான துகிலுரிதல் நயகரா வீழ்ச்சி"

இதுபோல அரசியல், ஈழவிடுதலை, ஆன்மீகம், விஞ்ஞானம், உளவியல், இயற்கை, அனுபவங்கள் போன்ற பல கருத்துக்களைக் கொண்ட 49 கவிதைகளின் தொகுப்பு.

வருமுன் காப்போம் (நலவாழ்வு CD)

"மருந்துகளோடு வாழ்ந்தது போதும்
எந்த நோயாக இருந்தாலும்
இந்த CDக்களை முழுசா பாருங்க!
அப்புறம் புரியும்"

இன்னும் தொடரும் இந்தப்பணி .....